திண்டுக்கல், எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் அவர்களின்
செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : முதல்வர், முனைவர். க.லட்சுமி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பிஎச்.டி.,

ந.க.எண் : 1775-1/ஆ/2024, நாள் :31.07.2025

பொருள்: கல்லூரிக் கல்வித்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி பணியமைப்பு - திண்டுக்கல் மாவட்டம் எம்.வி.முத்தையாஅரசு மகளிர் கலைக் கல்லூரி - நேரடி நியமனம் - தொகுதி IV - 2022-2023 ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது - **செல்வி.த.ஹரிணி, இளநிலை உதவியாளர்** பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக:-

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலர் கடித ந.க.எண்: 1926/PSD-D2/2023, நாள்: 04.09.2023.
2. சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 35681/ஆ1/2023, நாள்: 23.11.2023.
3. இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 1775-1/ஆ/2024 நாள்: 27/11/2023.
4. சென்னை கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்: TNDCE/4777/2025-B1, நாள்: 26.06.2025

---------------

பார்வை 1 -இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தொகுதி IV 2022-2023 ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 2-இல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி இக்கல்லூரிக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 3-இல் காணும் இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளின் படி தனியருக்கு பணிநியமனம் செய்யப்பட்டு 30.11.2023 முற்பகல், செல்வி. த.ஹரிணி, இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து பார்வை 4-இல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்விற்கு இணங்க, பார்வை 3-இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி **செல்வி.த.ஹரிணி,** இளநிலை உதவியாளர் என்பார் பணியில் சேர்ந்த நாளான 30.11.2023 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளை தெரிவித்து பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிகாலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவகாலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலத்திற்குள் பவானிசாகர் மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

31/7/2025

முதல்வர்
எம்.வி. முத்தையா அரசினர்
மகளிர் கலைக்கல்லூரி,
திண்டுக்கல்-1.

பெறுநர்:
செல்வி. த.ஹரிணி, இளநிலை உதவியாளர்

31/7/25

நகல்:-
1. கல்லூரிக் கல்வி ஆணையர், சென்னை-15
2. உபரி-2

Scanned with OKEN Scanner